23.05.2016

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு நிறுத்தம்

தண்டராம்பட்டை அடுத்த சாத்தனூர் அணையிலிருந்து திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாய நிலங்களின் பாசனத்துக்காக திறந்துவிடப்பட்ட தண்ணீர் ஞாயிற்றுக்கிழமை நிறுத்தப்பட்டது.

சாத்தனூர் அணையிலிருந்து திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாய நிலங்களின் பாசனத்துக்காக கடந்த பிப்ரவரி 12-ஆம் தேதி முதல் திறந்துவிடப்பட்ட தண்ணீர் 90 நாள்கள் நிறைவடைந்த நிலையில் நிறுத்தப்பட்டது. முன்னதாக மார்ச் 13 முதல் 17-ஆம் தேதி வரை 5 நாள்களும், ஏப்ரல் 17 முதல் 21-ஆம் தேதி வரை 5 நாள்களும் என மொத்தம் 10 நாள்கள் இடையில் நீர் திறப்பு நிறுத்தப்பட்டது.

இதுவரை சாத்தனூர் அணையின் இடதுபுறக் கால்வாயில் 370 கனஅடி நீரும், வலதுபுறக் கால்வாயில் 220 கனஅடி நீரும் என மொத்தம் 590 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இடதுபுற கால்வாய் வழியாக 40 ஏரிகளுக்கு நீர் சென்றதால், 24 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. இதேபோல், வலதுபுறக் கால்வாய் வழியாக 48 ஏரிகளுக்கு நீர் சென்றதால், 21 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன.

மேலும், திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு நீர் திறந்துவிடப்பட்டதால், அந்தப் பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. தண்ணீர் திறப்பதற்கு முன் அணையின் முழு அளவான 119 அடி (அதாவது 7,321 மில்லியன் கனஅடி) நீர் இருந்தது.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 82 அடி நீர் உள்ளது. பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டதால் நீர் மட்டம் 37 அடி குறைந்துள்ளது.

தற்போது அணைக்கு நீர்வரத்து எதுவும் இல்லை. கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், சாத்தனூர் அணை நிரம்பவில்லை. இதன் காரணமாக பாசனத்துக்கு குறைந்த நாள்கள் மட்டுமே நீர் திறந்து விடப்பட்டு வந்தது.

இந்நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த வடகிழக்குப் பருவ மழையால் அணை முழு கொள்ளளவான 119 அடியை எட்டியது. இதன் காரணமாக இந்த ஆண்டு விவசாய பாசனத்துக்காக 90 நாள்கள் நீர் திறந்துவிடப்பட்டது.

## உதகையில் மலர்க் காட்சி: தாவரவியல் பூங்காவில் ஏற்பாடுகள் தீவிரம்

உதகையில் வரும் 27-ஆம் தேதி தொடங்கி 3 நாள்களுக்கு நடைபெறவுள்ள 120-ஆவது மலர்க் காட்சிக்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

இந்த மலர்க் காட்சிக்காக தாவரவியல் பூங்காவிலுள்ள காட்சி மாடத்தில் தொட்டிகளில் வளர்க்கப்பட்ட மலர்ச் செடிகளை அடுக்கும் பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இப்பணியை மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தொடங்கி வைத்தார்.

உதகையில் கோடை சீசனையொட்டி ஆண்டுதோறும் மே மாதம் மூன்றாவது வாரத்தில் அரசினர் தாவரவியல் பூங்காவில் மலர்க் காட்சி நடத்தப்படுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டில் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடவடிக்கைகளின் காரணமாக மலர்க் காட்சி மே மாதம் இறுதி வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதன்படி, 27-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை 3 நாள்களுக்கு மலர்க் காட்சி நடத்தப்படுகிறது.

இந்த மலர்க் காட்சிக்காக தாவரவியல் பூங்காவே வண்ண மலர்களால் சூழப்பட்டுள்ளது எனலாம். இதில் பார்வையாளர்களைக் கவரும் வகையில் பிரதானக் காட்சி மாடத்தில் வைப்பதற்கென சுமார் 15,000 மலர்த் தொட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இம்மலர்த்

தொட்டிகளை காட்சி மாடத்தில் அடுக்கும் பணிகள் ஞாயிற்றுக்கிழமை தொடங்கின. மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் மலர்த் தொட்டிகளை அடுக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் ஆட்சியர் கூறியதாவது:

உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் நடைபெறவுள்ள 3 நாள் மலர்க் காட்சிக்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

தாவரவியல் பூங்காவிலுள்ள பிரதானக் காட்சி மாடத்தில் நடப்பு ஆண்டில் 15,000 மலர்த்தொட்டிகள் காட்சிக்காக வைக்கப்படும். இதில், ஆசியாடிக் லில்லி, ஓரியண்டல் லில்லி, கேலண்டுலா, இண்கா மெரிகோல்டு, பிரெஞ்சு மெரிகோல்டு, பிளாக்ஸ், பெட்டூனியா, சால்வியா, பிகோனியா, புளோரன்ஸ், ஆஸ்டர், பால்சம் மற்றும் கிரசாந்திமம் உள்ளிட்ட 194 ரகங்களிலான மலர்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

இதைத் தவிர பூங்காவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள புதுப் பூங்காவிலும் சுமார் 6,000 மலர்த் தொட்டிகள் காட்சிக்காக அடுக்கி வைக்கப்படவுள்ளதாகவும், இவை சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு விருந்தாக அமையும் எனவும் ஆட்சியர் குறிப்பிட்டார்.

மலர்த் தொட்டிகளை அடுக்கும் நிகழ்ச்சியில் தோட்டக் கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி, துணை இயக்குநர்கள் சிவ சாம்ராஜ், உமாராணி உள்ளிட்ட அலுவலர்களும் பங்கேற்றிருந்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### போலிக்கு கேரன்டி

வங்கியில் கடன் வாங்காத ஒரு விவசாயி உலகம் முழுவதும் தற்போது பிரபலமாகியிருக்கிறார். அதற்கு காரணம் அவர் பெயர் மன்மோகன்சிங் என்பதால் அல்ல; அவர் மல்லையாவுக்கு கடன் வாங்க வங்கியில் கேரன்டி போட்டதாக அவரின் வங்கி கணக்கு முடக்கப்பட்ட விவகாரத்தால் தான்.

உத்தரப்பிரதேசத்தை சேர்ந்த விவசாயி மன்மோகன் சிங், மல்லையாவிற்கு கேரன்டி கொடுத்தார் என்பதற்காக வங்கி நிர்வாகம் அவரது கணக்கை முடக்கி வைத்துள்ள செய்தியின் பின்னணியில் இருக்கும் செயல்பாடுகள் தான் தற்போது விவாதக்களத்திற்கு வந்துள்ளது. உண்மையில் போலியாக அவர் கையெழுத்து போடப்பட்டு சதி நடந்துள்ளது என்பது வேறு கதை.

ஒருவர் கேரன்டி கொடுத்தார் என்பதற்காக அவரது வங்கி கணக்கை முடக்க முடியுமென்றால், 7 வங்கிகளில் 9,600 கோடி ரூபாய் கடன் வைத்து விட்டு லண்டனுக்கு தப்பியோடிய தொழிலதிபர் மல்லையாவை என்ன செய்திருக்க வேண்டும்? இந்த அப்பாவி விவசாயி எப்படி 9000 கோடி ரூபாய் கடன் பாக்கி வைத்து விட்ட மலைவிழுங்கி மல்லையாவுக்கு கேரன்டி போட்டிருக்க முடியும் என்று கூட ஏசி ரூமில் முடிவெடுக்கும் வங்கி அதிகாரிகள் யோசிக்கவே இல்லை. அதற்கு அவர்களுக்கு நேரமும் இல்லை. அதனால் முடக்கியதை பற்றி கூட கவலைப்படவே இல்லை. போலி கையெழுத்து என்று கூட சந்தேகிக்காமல் போலிக்கு அதிகாரிகளே 'கேரன்டி' தந்தது தான் வேதனையின் உச்சம். மீடியாக்கள் வெளிச்சம் போட்டபின் தான் இந்த விவகாரம் வெளியில் வந்தது; வங்கிகளின் இரண்டு விவகாரங்கள் வெளிச்சத்துக்கு வந்தது. வங்கி அதிகாரிகள் இப்படி மல்லையாவுக்காக எத்தனை அப்பாவி மக்கள் பெயர்களை போலியாக பயன்படுத்தி உள்ளனரோ என்று இப்போது சந்தேகம் எழுந்துள்ளது.

இப்படி ஒரு புறம் பணம் 'கொள்ளை' போகும் போது, இந்தியாவில் ஒவ்வொரு நாளும் வங்கிக்கடன் செலுத்த முடியாமலும், இடுபொருள் வாங்க முடியாமலும், விளைவித்த பொருட்களுக்கு விலை கிடைக்காமலும் 46 விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. வங்கி அதிகாரிகள் டார்ச்சரால் விவசாயிகள் மாய்த்து கொள்ளும் செய்திகள் வலம் வந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனால், பல பெரும் தனியார் நிறுவனங்களுக்கு பொதுத்துறை வங்கிகள் வழங்கிய ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் கடன் தொகை வசூலிக்க இயலாத காரணத்தால் 2013ல் செப்டம்பர் மாத

வராக்கடன் மதிப்பு 10.13 சதவீதமாக உயர்ந்தது. இதனால் 2.03 லட்சம் கோடி ரூபாயாக இருந்த வராக்கடன், 2015ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதி நிலவரப்படி, 3,93,035 கோடியாக உயர்ந்து விட்டது.

இவை மட்டுமின்றி 400 தனியார் வங்கிகளுக்கு வராக்கடன் தொகை ரூ.46,271 கோடியாக உள்ளது. இந்த கடனையும் சேர்த்தால், இந்திய வங்கித்துறையின் மொத்த வராக்கடன் ரூ.4.4 லட்சம் கோடியாக உயருகிறது. தற்போதைய நிலையில், 24 அரசு வங்கிகளின் மொத்த பங்குகளின் சந்தை மதிப்பு ரூ.2,62,955 கோடி. இந்த தொகையை விட வராக்கடன் மதிப்பு 1.5 மடங்காக உயர்ந்து விட்டது. இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பே வங்கிகள் தான். ஆனால், அந்த வங்கிகள் விவசாயக்கடனையோ, விவசாயி மகன் படிப்புக்கு வாங்கிய கடனையோ தள்ளுபடி செய்ய மறுக்கின்றன. ஆனால், 2015ம் ஆண்டு மட்டும் 10 பெரிய வங்கிகள் பெருமுதலாளிகள் வாங்கிய 40 ஆயிரம் கோடி ரூபாயை தள்ளுபடி செய்துள்ளன. இந்த பணம் யாருடையது? நமது பணம் என்பது ஆட்சியாளர்களுக்கு தெரியாதா? தெரியும். ஆனால், பூனையைப் போல கண்ணை மூடிக் கொண்டு உலகம் இருட்டு என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த இருட்டு ஒரு நாள் வெளிச்சத்திற்கு வரும்

## ஆந்திராவில் இருந்து நாமக்கல்லுக்கு 2500 டன் ரேஷன் அரிசி வருகை

நாமக்கல், : தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகள் மூலம் அரிசி, சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில் 1,200க்கும் மேற்பட்ட ரேஷன் கடைகள் மூலம் அத்தியாவசிய பொருட்களான அரிசி, சர்க்கரை, பருப்பு ஆகியவை விநியோகிக்கப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்திற்கு ஆந்திர மாநிலத்தில் இருந்து ரேஷன் அரிசி இறக்குமதி செய்வது வழக்கம். இந்நிலையில் நேற்று காலை ஆந்திர மாநிலத்தில் இருந்து 2,500 டன் ரேஷன் அரிசி ரயில் மூலம் வந்தது. 40 வேகன்களில் வந்த அரிசி மூட்டைகளை லாரிகளில் ஏற்றும் பணியில் ஊழியர்கள்

ஈடுபட்டனர்.பின்னர் அரிசி மூட்டைகள் யாவும் திருச்சி ரோட்டில் உள்ள குடோனிற்கு பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டது. ரேஷன் அரிசி வந்ததால், பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி ரேசன்அரிசி கிடைக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வெயிலின் தாக்கத்தால் தக்காளி விலை அதிகரிப்பு கிலோ ரூ.55க்கு விற்பனை

சேலம் : சேலம் மாவட்டத்தின் பனமரத்துப்பட்டி, மேச்சேரி, ஓமலூர், காருவள்ளி, சின்னதிருப்பதி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை பகுதிகளில் அதிகளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. அங்கு அறுவடை செய்யப்படும் தக்காளி, பெட்டிகளில் சேலம் மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் தக்காளியின் வரத்து அதிகரித்து, மலிவு விலைக்கு விற்பனை செய்யப்படும்.

ஆனால் இந்தாண்டு வழக்கத்தை காட்டிலும் இருமடங்கு வெயில் சுட்டெரித்தது. இதனால் ெசடியில் உள்ள பூக்கள் கருகி, தக்காளி விளைச்சல் வெகுவாக பாதித்தது. எனவே மார்க்கெட்டுக்கு வரும் தக்காளி பழங்களின் வரத்து குறைந்து, விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது: சேலம் மார்க்கெட்டுகளுக்கு நாள்தோறும் 30 முதல் 40 டன் வரையிலான தக்காளி வரத்து இருக்கும். ஆனால் வெயிலின் தாக்கம் காரணமாக, தினசரி 20 டன் தக்காளி வருவதே அரிதாகி உள்ளது.

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் கிலோ ரூ. 5 முதல் ரூ. 10 வரை தக்காளி விற்பனை செய்யப்பட்டு வந்தது. அதன்பிறகு வரத்து குறைந்ததால், படிப்படியாக விலை உயர்ந்து, தற்போது கிலோ ரூ. 45 முதல் ரூ. 55 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் தற்போதுதான், மே மாதத்தில் தக்காளி விலை அதிகரித்துள்ளது. சென்ற வாரத்தில் ெபய்த மழையால், இரு தினங்களாக தக்காளி வரத்து சற்று

அதிகரித்துள்ளது. இதே நிலை நீடித்தாலும், அடுத்த 15 நாட்களுக்கு பிறகே விலை குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கோடை மழை எதிரொலி பாலக்கோட்டில் தக்காளி விலை உயர்வு

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் கோடை மழை எதிரொலியாக தக்காளி மற்றும் வெங்காயம் விலை உயர்ந்தது. தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு சுற்று வட்டார பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் தக்காளி பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் தக்காளி பாலக்கோடு மார்க்கெட் மூலம் தென் மாவட்டங்களுக்கும் சென்னை, கோயமுத்தூர் போன்ற பிற பெருநகரங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக தர்மபுரி மாவட்டத்தில் கோடை மழை பெய்து வருவதையொட்டி தக்காளி விலை உயர்ந்துள்ளது.

இதனால் பாலக்கோடு மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படும் தக்காளி, உள்ளூர் விற்பனை மற்றும் சந்தை விற்பனைக்கு அதிகம் பேர் வாங்கி செல்கின்றனர். நாள் ஒன்றுக்கு ஒரு டன் அளவிற்கு தக்காளி விற்பனையாகிறது. அதே போல் பென்னாகரம், இண்டூர், அதகப்பாடி போன்ற பகுதிகளில் விளைவிக்கப்படும் சின்ன வெங்காயம் இண்டூர் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ தக்காளி ரூ.45க்கும், ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.45 வரை விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி மற்றும் வெங்காயம் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## குளிர்ந்த சீதோஷ்ன நிலையால் காய்கறி விளைச்சல் அதிகரிப்பு ஓசூர் விவசாயிகள் மகிழ்ச்சி

ஓசூர் : ோகாடை வெயிலுக்கு மத்தியில் மழை பெய்ததால், மீண்டும் குளிர்ந்த சீதோஷ்ன நிலைக்கு ஓசூர் மாறியுள்ளது. இதனால், காய்கறி விளைச்சல் அதிகரித்து விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடல் மட்டத்தில் இருந்து ஆயிரத்து 300 அடி உயரத்தில் ஓசூர் நகரம் அமைந்துள்ளது. இதனால் தமிழகத்தின் மற்ற நகரங்களை காட்டிலும், ஓசூரில் எப்போதும் குளிர்ந்த சீதோஷ்ன நிலை காணப்படும். இந்த

சீதோஷன நிலை காரணமாக, ஓசூரில் பூக்கள் மற்றும் காய்கறிகள் அதிக அளவில் விளைச்சல் ஆகிறது. தொழில் நகரமான ஓசூர், காய்கறி, பூக்கள் உற்பத்தியில் சிறப்பான இடத்தை பெற்றுள்ளது.

ஓசூர் சுற்று வட்டாரத்தில் உருளை கிழங்கு, முட்டை கோஸ், கேரட், பெங்களூர் தக்காளி, நாட்டு தக்காளி மற்றும் கொத்தமல்லி ஆகியவற்றை அதிகளவில் விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். இங்கு நிலவும் சீதோஷ்ன நிலை காரணமாக, ஆண்டு முழுவதுமாக காய்கறிகள் உற்பத்தி செய்கின்றனர். இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகள், மகாராஷ்டிரா மாநிலம், டில்லி மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

ஓசூரில் விளைவிக்கப்படும் பெங்களூரு தக்காளிக்கு என்றும் தனி மவுசு உண்டு. ஓசூரை சுற்றியுள்ள தேன்கனிக்கோட்டை, தளி, பேரிகை, பாகலூர், சூளகிரி பகுதிகளில் தக்காளி மற்றும் காய்கறிகளை விவசாயிகள் பயிரிட்டள்ளனர். இங்கு உற்பத்தியாகும் காய்கறிகள் ஓசூர் உழவர் சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். தற்போது, சீதோஷ்ன நிலை மாற்றத்தால் தக்காளி விளைச்சல் அதிகரித்து விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

இதுகுறித்து தக்காளி விவசாயி கூறுகையில், 'ஒரு ஏக்கரில் தக்காளி பயிரிட, சுமார் ரூ.70 ஆயிரம் வரை செலவாகிறது. தக்காளி செடி வைத்த 3 மாதத்தில் காய் பிடித்து அறுவடைக்கு வந்து விடும். கடந்த மாதம் கடும் வெயிலால் செடிகள் கருகியதால் விவசாயிகள் கவலையடைந்தனர். இந்நிலையில், தற்போது மழை பெய்து, மீண்டும் குளிர்ந்த சீதோஷன நிலைக்கு மாறியுள்ளதால் தக்காளி உள்ளிட்ட காய்கறி செடிகள் புத்துயிர் பெற்றுள்ளன. மேலும் தக்காளி விளைச்சல் அதிகாரித்துள்ளது. உழவர் சந்தை, மார்க்கெட்டில் தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ.40 முதல், ரூ 50 வரை விற்பனையாகிறது. நல்ல விளைச்சல், அதிகமான விலை கிடைப்பதால், ஏக்கருக்கு ரூ.2 லட்சம் வரை வருவாய் கிடைக்கும் என்பதால் மகிழ்ச்சியாக உள்ளது என்று அவர் கூறினார்.

**காரிமங்கலத்தில் மல்கோவா மாம்பழம் விற்பனை அமோகம் கிலோ ரூ.100க்கு விற்பனை**

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் 17 ஆயிரம் ஹெக்டேரில் மா சாகுபடி நடக்கிறது. மாவட்டம் முழுக்க பெங்களூரா, நீலம், செந்தூரா, அல்போன்சா, பீத்தர், பங்கனப்பள்ளி உள்ளிட்ட ரகங்கள் அதிக பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது அதிகளவில் மா விளைச்சலை கொடுத்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் தட்பவெப்பநிலை சாதகமாக உள்ளதால், இந்த ஆண்டு பூக்கள் உதிர்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி, ஊத்தங்கரை, புலியூர் பகுதியில் இருந்து தர்மபுரி நகருக்கு மல்கோவா மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. தர்மபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் மல்கோவா மாம்பழம் கிலோ ரூ.100க்கு விற்கப்படுகிறது. அதிகம் சாலையோர கடைகள், தள்ளுவண்டிகள் மற்றும் கூடையில் தலை சுமையாக வியாபாரிகள் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். அதிக சுவையுள்ளது மல்கோவா ரகம் என்பதால் மக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## அந்தியூர் அருகே உள்ள வரட்டுப்பள்ளம் அணை நீர்மட்டம் 18 அடியாக குறைந்தது



அந்தியூர் அருகே உள்ள வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 18 அடியாக குறைந்தது.

வரட்டுப்பள்ளம் அணை

அந்தியூர் அருகே பர்கூர் மலைப்பகுதியில் வரட்டுப்பள்ளம் அணை அமைந்து உள்ளது. அணையின் மொத்த கொள்ளளவு உயரம் 33.33 அடி ஆகும். இந்த அணையின் நீர்பிடிப்பு பகுதிகளாக பர்கூர் மலைப்பகுதியில் உள்ள தாளக்கரை, தாமரைக்கரை, கல்லுப்பள்ளம், வரட்டுப்பள்ளம், கும்பரவாணி பள்ளம் ஆகியவை உள்ளன. இந்த அணையில் இருந்து கெட்டிசமுத்திரம் ஏரி, அந்தியூர் பெரிய ஏரி, சந்தியபாளையம் ஏரி, வேம்பத்தி ஏரி, ஆப்பக்கூடல் ஏரிக்கு தண்ணீர் செல்கிறது.

இதன்காரணமாக இந்த ஏரிகள் மூலம் அந்தியூர், வேம்பத்தி, வெள்ளாளபாளையம், ஆப்பக்கூடல், பச்சாம்பாளையம், பள்ளியபாளையம், வட்டக்காடு, சங்கராபாளையம், எண்ணமங்கலம் உள்பட பல்வேறு கிராமங்களில் உள்ள 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் பயன்பெறுகின்றன. அதுமட்டுமின்றி பர்கூர் மலைப்பகுதிகளில் உள்ள வனவிலங்குகளுக்கு நீர் ஆதாரமாகவும் இந்த அணை உள்ளது.

18 அடி

கடந்த 6 மாதங்களுக்கு முன்பு பெய்த மழையின் காரணமாக வரட்டுப்பள்ளம் அணை ஏரி நிரம்பியது. இதைத்தொடர்ந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதே நேரத்தில் பர்கூர் மலைப்பகுதியில் மழை பெய்யாததால் அணைக்கு வரும் நீர்வரத்து முற்றிலும் தடைபட்டது. நீர்வரத்து இல்லாததுடன், பாசனத்துக்காக அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதால் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது.

இந்தநிலையில் பாசனத்துக்காக அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவது நிறுத்தப்பட்டது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்ட உயரம் 18 அடியாக இருந்தது. இதனால் வரட்டுப்பள்ளம் அணை குட்டைபோல் காட்சி அளிக்கிறது. அணைக்கு நீர் வரத்தும் இல்லை. அணையில் இருந்து நீர் வெளியேற்றமும் இல்லை. பர்கூர் மலைப்பகுதியில் மழை பெய்யவில்லை என்றால் வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் மேலும் குறைய வாய்ப்புள்ளது என்பதால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்து உள்ளனர்.

# அந்தியூர் சந்தையில் எருமை மாடு ரூ.60 ஆயிரத்துக்கு விற்பனை



அந்தியூர் சந்தையில் எருமை மாடு ஒன்று ரூ.60 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

மாட்டுச்சந்தை

அந்தியூர் கால்நடை சந்தையில் வாரம்தோறும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாட்டுச்சந்தை நடைபெறும். அதன்படி அந்தியூர் கால்நடை சந்தையில் மாடு விற்பனை 2 நாட்கள் நடந்தது.

இந்த சந்தைக்கு அந்தியூர், பர்கூர், தேவர்மலை, ஈரோடு, கோபி, சத்தியமங்கலம், டி.என்.பாளையம், நாமக்கல், சேலம், மேட்டூர், ஓமலூர், பண்ணவாடி, இடைப்பாடி, கொங்கணாபுரம், கோவை, மேட்டுப்பாளையம், அன்னூர், திருப்பூர், கர்நாடக மாநிலம் வேளாம்பட்டி, மாதேஸ்வரன் மலை, ராமபுரம், கர்காகண்டி உள்பட பல பகுதிகளில் இருந்து ஏராளமான விவசாயிகள் தங்கள் மாடுகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

ரூ.60 ஆயிரம்

நேற்று நடந்த சந்தையில் கொங்கன் இன பசுமாடு ஜோடி ஒன்று ரூ.30 ஆயிரம் முதல் ரூ.75 ஆயிரம் வரையும், பர்கூர் இன செம்மை நிறமாடு ஒன்று ரூ.15 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரையும் விற்பனை ஆனது. சிந்து இன மாடு ஒன்று ரூ.27 ஆயிரம் முதல் ரூ.43 ஆயிரம் வரையும், ஜெர்சி இன மாடு ஒன்று ரூ.17 ஆயிரம் முதல் ரூ.45 ஆயிரம் வரையும் விலைபோனது. நாட்டு பசுமாடு ஒன்று ரூ.25 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரையும், எருமை மாடு ஒன்று ரூ.25 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் வரையும், கன்று குட்டிகள் ரூ.7 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரையும் விற்பனை ஆனது.

ஈரோடு, சேலம், நாமக்கல், திருப்பூர், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, கேரளா மற்றும் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஏராளமான வியாபாரிகள் இங்கு வந்து மாடுகளை விலை பேசி பிடித்துச்சென்றனர்.

## பரமத்திவேலூர் ஏல சந்தையில் வாழைத்தார் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி



பரமத்திவேலூர்,

பரமத்திவேலூர் வாழைத்தார் ஏல சந்தையில் வாழைத்தார்களின் விலை உயர்ந்து உள்ளதால் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

வாழை சாகுபடி

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் காவிரி கரையோர பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இங்கு விளையும் வாழைத்தார்கள் கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, ஈரோடு, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் தினந்தோறும் லாரிகள் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும் சிறு விவசாயிகள் பரமத்தி வேலூர் வாழைத்தார் ஏல சந்தைக்கு தாங்கள் உற்பத்தி செய்யும் வாழைத்தார்களை நேரடியாக கொண்டு வந்து விற்பனை செய்யும் வசதி உள்ளது.

விலை உயர்வு

இங்கு கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.250 வரையிலும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.200–க்கும், பச்சைநாடன் வாழைத்தார் ரூ.150–க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.200–க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.3–க்கு விற்பனையானது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஏலத்திற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைத்தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் பூவன் வாழைத்தார் அதிகபட்சமாக ரூ.300 வரையிலும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.250–க்கும், பச்சைநாடன் வாழைத்தார் ரூ.250–க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.250–க்கும் ஏலம் போனது. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.4–க்கு விற்பனையானது.

விவசாயிகள் மகிழ்ச்சி

கடந்த வாரத்தை விட வாழைத்தார்களின் வரத்து குறைந்து இருந்ததாலும், வெளி மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் வியாபாரிகள் வந்து இருந்ததாலும், வாழைத்தார்களின் விலை அதிகரித்து உள்ளது என விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

## குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நடைபெற்ற பழக்கண்காட்சி நிறைவு 30 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு களித்தனர்



குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 2 நாட்கள் நடைபெற்ற பழக்கண்காட்சியை 30 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு களித்தனர்.

பழக்கண்காட்சி

நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 58-வது பழக்கண்காட்சி நேற்று முன்தினம் தொடங்கியது. இதனை மாவட்ட கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்தார். பழக்கண்காட்சியை முன்னிட்டு கோவை, திருப்பூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் இருந்து தோட்டக்கலைத்துறையினர் சிம்ஸ் பூங்காவில் அரங்குகள் அமைத்து இருந்தனர்.

இந்த கண்காட்சியில் சிறப்பு அம்சமாக 25 அடி உயரத்திலும், 10 அடி அகலத்திலும் 3 ஆயிரம் கிலோ எடை உள்ள அன்னாசி மற்றும் ஆரஞ்சு பழங்களால் கலங்கரை விளக்கம் உருவாக்கப்பட்டு இருந்தது. மிக பிரமாண்டமான முறையில் உருவாக்கப்பட்டு இருந்த இந்த கலங்கரை விளக்கம் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

பாய்மர கப்பல்

இதேபோல் 1000 கிலோ எடை கொண்ட திராட்சை, மாதுளை, ஆப்பிள் மற்றும் ஆரஞ்சு பழங்களை கொண்டு 15 அடி நீளம் மற்றும் 10 அடி உயரம் கொண்ட பாய்மர கப்பல், மாம்பழ தோலை கொண்டு உருவாக்கப்பட்ட டிராகன், 50 கிலோ பப்பாளி கொண்டு உருவாக்கப்பட்ட டால்பின் மீன், மீன் அருங்காட்சியகம், ஒரு டன் மாம்பழங்களை கொண்டு உருவாக்கப்பட்ட குதிரை உருவம் ஆகியவற்றை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர். சுற்றுலா பயணிகளை கவர்ந்த பழக்கண்காட்சி நேற்றுடன் நிறைவு பெற்றது. இந்த கண்காட்சியை காண தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து இருந்தனர்.

30 ஆயிரம் சுற்றுலா பயணிகள்

இதுகுறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறியதாவது:-

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 58-வது பழக்கண்காட்சி நிறைவு விழா நேற்று மாலை 3 மணியளவில் நடைபெற்றது. இந்த கண்காட்சியை 30 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு களித்தனர். வழக்கமாக பழக்கண்காட்சி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நிறைவு நாளன்று பரிசுகள் வழங்கப்படும். ஆனால் இந்த ஆண்டு ஒரு சில காரணங் களுக்காக பரிசுகள் தற்போது வழங்கப்பட வில்லை. இந்த பரிசுகள் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் வருகிற 29-ந் தேதி நடைபெறும் மலர் கண்காட்சி நிறைவு விழாவில் வழங்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## **தஞ்சையில் இருந்து விழுப்புரத்துக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது**



தஞ்சாவூர்,

தஞ்சையில் இருந்து விழுப்புரத்துக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

<u>நெல் கொள்முதல் நிலையம்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல், தமிழக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

<u>1,200 டன் புழுங்கல் அரிசி</u>

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது விநியோகத்திட்டத்தில் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளில் இருந்து ஏற்றிவரப்பட்ட 1,200 டன் அரிசி மூட்டைகள் தஞ்சை ரெயில் நிலையத்துக்கு லாரிகள் மூலம் நேற்று கொண்டுவரப்பட்டன.

பின்னர் அந்த அரிசி மூட்டைகள் தஞ்சையில் இருந்து சரக்கு ரெயில் மூலம் விழுப்புரத்துக்கு 21 ரெயில் வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

## திருச்செந்தூரில் கரை ஒதுங்கிய அரியவகை மீன்



திருச்செந்தூர்,

திருச்செந்தூர் அய்யா வைகுண்டபதி கோவில் கடற்கரையில் நேற்று முன்தினம் மாலையில் மலைப்பாம்பு போன்ற வடிவில் சுமார் 2 அடி நீள அரிய வகை மீன் இறந்து கரை ஒதுங்கியது. அதன் உடல் முழுவதும் கருப்பு, வெள்ளை நிற புள்ளிகளாக காட்சி அளித்தது. இதனை அனைவரும் வியப்புடன் பார்த்து சென்றனர்.